# கரூரில் ‘முதலமைச்சரின் தாயுமானவர்’ திட்டம்!

## செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர்.ஆக.14.

கரூரில் “முதலமைச்சரின் தாயுமானவர்” திட்டத்தைத் தொடங்கி வைத்து பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருள்களை சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை தண்டையார்பேட்டை கோபால் நகரில் வயது முதிர்ந்தோர். மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கே சென்று ரேசன் பொருள்கள் வழங்கும் ‘முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை” தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி. செந்தில்பாலாஜி மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல் தலைமையில், கரூர் வஞ்சியம்மன் கோவில் தெருவில் பயனாளிகளின் இல்லங்களுக்கு நேரில் சென்று ரேசன் பொருள்களை வழங்கினார்.

இதுகுறித்து கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில்பாலாஜி தெரிவித்ததாவது:

“எல்லார்க்கும் எல்லாம்” என்ற திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பாக வயது முதிர்ந்தோர். மாற்றுத்திறனாளிகள் இல்லங்களுக்கே சென்று ரேசன் பொருள்கள் வழங்கும் ‘முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை” இன்றைய தினம் தொடங்கி வைத்துள்ளார்கள். கரூர் மாவட்டத்தில் நகர்ப்புற பகுதிகளில் 159 நியாய விலைக்கடைகளில் 1.36.116 குடும்ப அட்டைகளும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 493 கடைகளில் 2.04,173 குடும்ப அட்டைகளும் என மொத்தம் 652 நியாய விலைக் கடைகளில் 3,40.289 குடும்ப அட்டைகள் உள்ளன.

“முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின்” கீழ் நகர்ப்புறங்களில் 70 வயது அடைந்த குடும்ப அட்டைதாரர்கள் 8,913மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்ப அட்டைகள் 335ம் என மொத்தம் 9.248 குடும்ப அட்டைகள் உள்ளன.

ஊரகப் பகுதிகளில் 70 வயது பூர்த்தி அடைந்த குடும்ப அட்டைதாரர்கள் 19.029ம் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் குடும்ப அட்டைகள் 417ம் என மொத்தம் 19.446 குடும்ப அட்டைகளும் என மொத்தம் இத்திட்டத்தின் கீழ் 28,694 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறுகின்றனர். இத்திட்டத்தில் பயனாளிகளின் பெயர் விடுபட்டிருந்தால் அவர்கள் மாவட்ட வழங்கல் அலுவலகத்தையோ அல்லது வட்டார வழங்கல் அலுவலகத்தையோ தொடர்பு கொண்டு இணைத்துக் கொள்ளலாம்.

‘முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின்” கீழ் கரூர் சட்டமன்ற தொகுதியில் 6,748 குடும்ப அட்டைதாரர்களும், குளித்தலை சட்டமன்ற தொகுதியில் 5.759 குடும்ப அட்டைதாரர்களும், கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதியில் 6,720 குடும்ப அட்டைதாரர்களும் மற்றும் அரவக்குறிச்சியில் 9,467 குடும்ப அட்டைதாரர்களும் என மொத்தம் 28,694 குடும்ப அட்டைதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 344 மெடன் அரிசியும், 115 மெ.டன் கோதுமை, 43 மெ.டன் சர்க்கரை, 29 மெ.டன் துவரம் பருப்பு மற்றும் பாமாயில் 28.694 (பாக்கெட்டுகள்) விநியோகிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின் மூலம் மாதம் ஒரு முறை 2வது சனிக்கிழமைகளில் பயனாளிகளின் வீட்டிற்கே சென்று ரேசன் பொருட்களை பணியாளர்கள் வழங்கவுள்ளனர்.

வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ரேசன் பொருட்களை நியாய விலைக் கடைகளுக்குச் சென்று வாங்கிய நிலை மாறி தங்கள் வீட்டிலிருந்தே ரேசன் பொருட்களை பெறும் சூழ்நிலையை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கியுள்ளார்கள் என செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர் வெ. கவிதா. கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் (பொ) கந்தராஜா, மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, மாவட்ட வழங்கல் அலுவலர் மரு. சுரேஷ், துணைப் பதிவாளர் (பொது விநியோகத் திட்டம்) அருண்மொழி, துணை மேயர் ப.சரவணன், மண்டலக் குழு தலைவர்கள் எஸ்.பி. கனகராஜ். ஆர்.எஸ்.ராஜா. மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மண்டலம் 4ல் உள்ள மண்டபவீதி என்ற பெயரை மாற்றம் செய்து அந்த சாலைக்கு ஈ.வி.கே. எஸ்.இளங்கோவன் வீதி என்று பெயர் மாற்றம் செய்யப்பட்ட, பெயர் பலகையினை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்தார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. பொறியாளர் அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

**பொறியாளர் அணிச் செயலாளர் கு.கருணாநிதி அறிவிப்பு**

**கோவை வடக்கு மாவட்டம்**

கோவை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட அம்பாள் நந்தகுமார் அவர்கள் மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்ட காரணத்தால், அவருக்குப் பதிலாக **ந. ஜெய கிருஷ்ணராஜ் (எ) பாலாஜி,** (71, பொன்னம்மாள் கார்டன், தொட்டிபாளையம் ரோடு, காரமடை, கோவை மாவட்டம்) அவர்கள் கோவை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராகவும்;

மாவட்ட துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட **வி. பிரபாகரன்** அவர்களை, அப்பொறுப்பிலிருந்து விடுவித்து அவருக்கு பதிலாக, சா.உதயகுமார் (305/34ஏ3, காந்தி நகர், 5வது வீதி, தெக்குப்பாளையம் அஞ்சல்,கோவை - 641020) அவர்களும்; மற்றும் **ஆர்.வீ. பரத்** (4/571-ஏ, நேதாஜி நகர் முதல் வீதி, இடையார்பாளையம் ரோடு, சி.டி.சி., மேட்டுப்பாளையம் - 641301.கோவை மாவட்டம்.), **என்.முகமது யாகூப்** (5/769, சுதந்திராபுரம், மேட்டுப்பாளையம், கோவை மாவட்டம்.) ஆகியோர் கோவை வடக்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்களாகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

**கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம்**

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட வெற்றி ஞானசேகரன் அவர்கள் மாநில துணைச் செயலாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **பா.மு.முகம்மது சம்சுதின்,**

(558, வேப்பனப்பள்ளி கிராமம் & அஞ்சல், கிருஷ்ணகிரி வட்டம் & மாவட்டம்) அவர்கள் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராகவும்; மேலும் **எஸ். வேலு** (டிரெண்ட் சிட்டி, ஒசூர்.), **கே. முகமத் இஸ்மாயில்** (ஆவலப்பள்ளி அட்கோ, பஸ்திரோடு, ஒசூர்.), **ஜி. நவீன்** (எட்டிப்பள்ளி கிராமம், வேப்பனப்பள்ளி, கிருஷ்ணகிரி மாவட்டம்), **சி. பேரஜன்** (முனிஸ்வரர் நகர், பூஞ்சோலை நகர் விரிவாக்கம், ஒசூர்.) ஆகியோர் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

**ஈரோடு வடக்கு மாவட்டம்**

ஈரோடு வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கருணாகரமூர்த்தி அவர்கள், ஈரோடு மத்திய மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால், அவருக்குப் பதிலாக **டி. கதிர்வேல்** (107, கரட்டாங்காட்டு தோட்டம், நாகதேவம் பாளையம் அஞ்சல், கோபிசெட்டிபாளையம் வட்டம், ஈரோடு மாவட்டம்) அவர்கள் ஈரோடு வடக்கு மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளராகவும்;

மேலும், **எஸ். அன்பழகன்** (59/190/1, கொடாரையான் தோட்டம், பழனி கவுண்டன் புதூர், கடத்தூர், நம்பியூர் வட்டம், ஈரோடு மாவட்டம்.) அவர்கள் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 12-08-2025.

**கு. கருணாநிதி**
செயலாளர்,
**தி.மு.க. பொறியாளர் அணி**

## தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்

**சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் **விழுப்புரம் மத்திய, திருப்பூர் மத்திய, ஈரோடு மத்திய** ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விழுப்புரம் மத்திய மாவட்டம்**

தலைவர் - எஸ். தாகீர் 26, ஏரிக்கரை தெரு, ஆர்.ஆர். நகர், விழுப்புரம்.

துணைத் தலைவர் - பி. தோமினிக் 21/1, சேவியர் தெரு, விழுப்புரம்.

அமைப்பாளர் - டி.என்.ஏ. தமின் 2, பாண்டி - விழுப்புரம் மெயின்ரோடு, நவமால்காப்பேர், தென்னல் அஞ்சல், கண்டமங்கலம் ஒன்றியம், விழுப்புரம் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) எம்.ஆர்.எஸ். அசாருதீன் 49, வ.உ.சி. தெரு, விழுப்புரம். 2) அ. அன்வர்பாஷா 4, குத்துவாபு தெரு, கோட்டக்குப்பம், வானூர் வட்டம், விழுப்புரம். 3) நா. ஹென்றிதாஸ் 456, அன்னை இந்திரா நகர், திருச்சிற்றம்பலம் கூட்ரோடு, வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். 4) எஸ்.கே.எஸ். முகமது அலி 38/14, கைவல்லியர் தெரு, விழுப்புரம். 5) எஸ். லூக்காஸ் செங்காடு கிராமம், விழுப்புரம் வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

**திருப்பூர் மத்திய மாவட்டம்**

தலைவர் - எம். அப்துல்லா 175/3, ரேணுகா நகர் 2வது வீதி, திருப்பூர் - 641604.

துணைத் தலைவர் - முஜிபுர் ரஹ்மான் 2/290, கே.கே. நகர், மங்கலம், திருப்பூர் - 641663.

அமைப்பாளர் - நிசார் அகமது 57, டிமாண்ட் முதல் வீதி, திருப்பூர் - 641604.

துணை அமைப்பாளர்கள் - 1) ரங்கசாமி (எ) டேவிட் 6/102, இந்திரா காலனி, கரடிவாவி, பல்லடம் - 641658, திருப்பூர். 2) யோஸ்வா (எ) தண்டபாணி 49/70, கிராஸ்ப் அப்பேரல்ஸ் எதிரில், ராயபுரம் 2வது வீதி, திருப்பூர் - 641601. 3) மு. இசாக் 73/1-ஏ, லிங்கேகவுண்டர் தெரு, ஓடக்காடு, திருப்பூர் - 641602. 4) முகமது ரபீக் 4/20, சாமுண்டிபுரம், சுப்பராயர் வீதி, திருப்பூர் - 641603. 5) அ. அபிபுல்லா 5/65, காமராஜ் நகர், பல்லடம் - 641664, திருப்பூர். 6) தங்கம் லிவிங்ஸ்டன் 5, ரயில்வே பீடர் ரோடு, திருப்பூர் - 641601.

**ஈரோடு மத்திய மாவட்டம்**

அமைப்பாளர் - ஜெ.எம். சர்தார் மொகைதீன் 80, பழனி ஆண்டவர் கோவில் வீதி, ஜம்பை அஞ்சல், பவானி - 638312, ஈரோடு.

துணை அமைப்பாளர்கள் - 1) எ. லாரன்ஸ் 5/609, முத்து நகர், கள்ளியம்புதூர், விஜயமங்கலம் அஞ்சல், பெருந்துறை - 638056, ஈரோடு. 2) ர. இம்ரான் 54, பாங்க் வீதி, அம்மாபேட்டை அஞ்சல், ஈரோடு - 638311 3) எச். சாதிக்பாட்சா 63, வர்ணபுரம் 2வது வீதி, நகராட்சி அலுவலகம் அருகில், பவானி - 638301. 4) இ. சலீம் 200/3, தாஸ்கண்ட் வீதி, கருமாண்டிசெல்லிபாளையம், ஈரோடு. 5) கே.ஆர்.கே. தஸ்தகீர் 53, குமரன் வீதி, கவுந்தப்பாடி, பவானி, ஈரோடு.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 12-08-2025.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்,
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

## தி.மு.க. மாணவர் அணி

### மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம் !

**தி.மு.க. மாணவர் அணிச் செயலாளர் இரா. ராஜீவ்காந்தி அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மாணவர் அணியின் **திருப்பூர் மத்திய, திருப்பூர் தெற்கு ஆகிய** மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருப்பூர் மத்திய மாவட்டம்**

அமைப்பாளர் - து.கோபிநாத் 3/24, எம்.சி.ஆர். குடியிருப்பு, நேரு வீதி, திருப்பூர் - 641601.

துணை அமைப்பாளர்கள் - 1) ந.சக்திவேல், எண்.170, கிழக்கு வீதி, விஜயாபுரம், காங்கேயம் சாலை, திருப்பூர் - 641606. 2) லி.அருள்பிரகாஷ், எண்.4/569, வெள்ளியம்பாளையம், தெற்கு அவிநாசி பாளையம், கொடுவாய், திருப்பூர் - 638660. 3) ரா. இந்திரவிஜய், எண்.5/313, கள்ளிமேடு, கணபதி பாளையம், பல்லடம், திருப்பூர் - 641605. 4) இரா.பிரேம்நாத், எண். 3, அண்ணாமலை கார்டன், கேடிசி பள்ளி வீதி, மங்கலம் வழி, திருப்பூர் - 641604.

5) அ.பைரோஜா, எண்.430, அறிவொளி நகர் 10-வது வீதி, நாரணாபுரம், பல்லடம், திருப்பூர்

**திருப்பூர் தெற்கு மாவட்டம்**

அமைப்பாளர் - விக்ரம் (எ) பா. மகாவிக்ரமாதித்தன் 20ஏ, சாய்ராம் லேஅவுட், உடுமலைப்பேட்டை - 642126, திருப்பூர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பா. அருள் 1/174, எஸ். பொன்னாபுரம், சமத்தூர் அஞ்சல், ஆனைமலை வட்டம், பொள்ளாச்சி - 642123, திருப்பூர் மாவட்டம். 2) எம். அரவிந்செல்வக்குமார் 4/92ஏ, சின்னப்புதூர், செல்லப்பம்பாளையம், உடுமலைப்பேட்டை - 642207. திருப்பூர் மாவட்டம். 3) என். சுமித்தாராணி 5/38எ, புதுப்பாளையம் அஞ்சல், உடுமலைப்பேட்டை - 642205, திருப்பூர் மாவட்டம். 4) க. சரவணசெல்வக்குமார் 1/3, பாப்பனூத்து பிரிவு, விளாமரத்துபட்டி அஞ்சல், உடுமலைப்பேட்டை வட்டம் - 642207, திருப்பூர் மாவட்டம். 5) க. தமிழரசன் 1/86, ஆவலப்பம்பட்டி, ஆ. நாகூர் அஞ்சல், பொள்ளாச்சி - 642205, திருப்பூர் மாவட்டம்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 18.
நாள் : 12-08-2025.

**இரா. ராஜீவ்காந்தி,**
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்பு!

# கழக இலக்கிய அணி நிர்வாகிகள் கூட்டம்!

### வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

கழக இலக்கிய அணி மாநில நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (14.08.2025 – வியாழக்கிழமை) காலை 10.00 மணிக்கு அண்ணா அறிவாலயத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்று ஆலோசனை வழங்குகிறார்.

இதில் அனைத்து மாநில நிர்வாகிகளும் கலந்து கொண்டு வரஇருக்கும் 2026 சட்டமன்றத் தேர்தலில் கழகத் தலைவர் – முதலமைச்சர் ஆணைப்படி செயல்படுவது பற்றி கலந்து ஆலோசனை செய்யப்படும் எனவே மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.


**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி



தர்மபுரி மாவட்டத்திற்கு வருகின்ற 16 ஆம் தேதி வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர்,கழகத்தலைவர் அவர்களுக்கு சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி,ஒன்றிய செயலாளர்கள் மற்றும் மாவட்ட நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி பேசினார்.உடன் தருமபுரி தொகுதி பார்வையாளர் செங்குட்டுவன் மற்றும் நகர செயலாளர் நாட்டான் மாது, மாநில, மாவட்ட, ஒன்றிய செயலாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### இரா.தட்சிணாமூர்த்தி
### ஆகஸ்ட் 14 (2021)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு 1968ஆம் ஆண்டு உறுப்பினராகி பணியாற்றியவர்.

சீரணி தொண்டராக பணியாற்ற தொடங்கி, தொண்டர் படையிலும், பின்னர் எழும்பூர் பகுதி பிரதிநிதியாக பொறுப்பு வகித்தவர்.

பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் சேமிப்பு கடனுதவி சங்க இயக்குராக இருந்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சென்னகேசவன்
### ஆகஸ்ட் 14 (1984)



தருமபுரி மாவட்டக் கழகச் செயலாளர், தமிழக சட்டமன்ற உறுப்பினர் ஆகிய பொறுப்புகளை வகித்தவர்.

கழகமே மூச்சென வாழ்ந்தவர். தலைவர் கலைஞர் அவர்களது பேரன்பிற்குரியவராக விளங்கியவர்.

“தருமபுரி மாவட்டத்தைக் கழகக் கோட்டையாக்க அந்தத் தங்க குணமுடையான் எப்படியெல்லாம் ஓய்வின்றி உழைத்திட்டான்” என தலைவர் கலைஞர் அவர்கள் தமது உடன்பிறப்புக்கான கடிதத்தில் எழுதியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தலைமைக் கழகம்
தி.மு.க.